පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය

பொலிஸ் ஊடகப் பிரிவு

POLICE MEDIA DIVISION

සෙත්සිරිපාය, බත්තරමුල්ල

තැ.පෙ.අංකය
த. பெ.இ
Po.Box No — 10120

ෆැක්ස්
தொலைநகல
Fax — 011-2171635

දුරකථන
தொலைபேசி
Telephone — 011-2887973 (HUNTING)

වෙබ්.ලිපිනය
இணையதளம்
Web Site — www.Police.lk

ඊ මේල්
மின்னஞ்சல்
E-mail — dir.media@police.gov.lk


මගේ අංකය
எனது இலக்கம்
My NO — 471/ 2024

ඔබේ අංකය
உமது இலக்கம்
Your No — / 2024

දිනය
திகதி
Date — 17/03/2024

நேரம் 1730

## ஊடக அறிக்கை

**தலைமை ஆசிரியர் / செய்தி ஆசிரியர்,**
**செய்தி பணிப்பாளர்/ செய்தி முகாமையாளர்**
**சகல ஊடக நிறுவனங்கள்.**

**சமூக பொலிஸ் குழு உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு வேலைத்திட்டம் – சமூகப் பொலிஸ் பிரிவு.**

யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளிலுள்ள சமூகப் பொலிஸ் குழு உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு வேலைத்திட்டம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கௌரவ டிரான் அலஸ் அவர்களின் தலைமையிலும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக அவர்கள் மற்றும் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் ஆகியோரின் பங்கேற்புடன் யாழப்பாணம் US ஹோட்டல் வாளாகத்தில் 2024.03.17 ஆம் திகதி இன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 431 கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள 2000 உறுப்பினர்கள் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் உரையாற்றுகையில் இப் பிரதேசங்களில் குற்றங்களை கட்டுப்படுத்துவதற்காக “யுக்திய” விஷேட சுற்றிவளைப்புகள் நடைமுறையில் உள்ளதாகவும், வடக்கு கிழக்கு தமிழ் மக்களை மையப்படுத்தி 24 மணிநேரமும் “107” அவசர அழைப்பினூடாக பெறப்படும் முறைப்பாடுகள் மற்றும் குற்றங்கள் தொடர்பான தகவல்களை பொலிஸ் நிலையங்கள் ஊடாக முறையாக விசாரணைகள் நடாத்தப்படும் என இதன் போது தெரிவித்தனர்.

இந் நிகழ்வின் “ஸ்வஸ்தி ப்பயின்” இசை நிகழ்ச்சி குழுவினர்களால் இசை நிகழ்ச்சி நடாத்தப்பட்டதுடன், வட மாகாணத்திற்கு வருகை தந்த கௌரவ பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அவர்கள், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக அவர்கள் மற்றும் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோருக்கு வட மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளால் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வுக்கு வருகைத் தந்தவர்களுக்காக அனைத்து மதங்களின் சமய வழிபாடுகளும் இடம்பெற்றதுடன் இலங்கை பொலிசின் உயர் அதிகாரிகளும் இதன் போது கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வின் சில புகைப்படங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம்.
பொலிஸ் ஊடகப் பிரிவு.